13. திரு. க. ர. நல்லசிவன்
14. திரு. ஆ. கு. சுப்பையா
15. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது
16. திரு. ம. பொ. சிவஞானம்

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவர்.

(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவையின் 201 (1)-வது விதியின்கீழ் 1970–71-க்கு பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்:—

1. திரு. ஜி. ஆர். எட்மண்ட், பேரவைத் துணைத் தலைவர்
2. திரு. இரெ. இளம்வழுதி
3. திரு. எல். கணேசன்
4. திரு. செஞ்சி வெ. முனுசாமி
5. திரு. ஈ. எம். நடராசன்
6. திரு. க. ந. சிவபெருமாள்
7. திரு. கே. ஆர். கோவிந்தன்
8. திரு. ஜே. ஜேம்ஸ்
9. திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி
10. திரு. எம். பூபதி
11. திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்
12. திரு. பி. வேலுசாமி

சட்டப் பேரவையின் 202-வது விதியின் கீழ், திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(ஈ) நடைமுறை விதிக் குழுவிற்கு நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றுமோர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவையின் 229 (1)-வது விதியின்கீழ் 1970–71-க்கு பின்வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:—

1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி, முதலமைச்சர்
2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் கல்வி, சுகாதார அமைச்சர்

3. மாண்புமிகு திரு. செ. மாதவன், தொழில் அமைச்சர்
4. திரு. ஜி. ஆர். எட்மண்ட், பேரவைத் துணைத் தலைவர்
5. திரு. பழனிவேல் ராஜன்
6. திரு. வி. ஆலடி அருணா
7. திரு. பெ. சீனிவாசன்
8. திரு. எம். சி. பாலன்
9. திரு. பி. எஸ். மணியன்
10. திரு. என். எஸ். வி. சித்தன்
11. திரு. க. இராமமூர்த்தி
12. திரு. கரு. சீமைச்சாமி
13. திரு. வி. கே. கோதண்டராமன்
14. திரு. அ. சேனாபதி
15. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
16. திரு. ஆ. கு. சுப்பையா

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவர்.

(4) 1970–71-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

கோரிக்கை எண் 19—கூட்டுறவு

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,08,53,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவரவர்களே, விலைவாசிகள் ஏற்றத்தினால் அவதிப்படும் மக்களுக்கு, மலிவு விலையில் பண்டங்கள் விற்க, கிராமங்கள் தோறும் கூட்டுறவு பண்டகசாலைகள் ஏற்படுத்துவது குறித்து விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,08,53,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன்: தலைவரவர்களே, சந்தானம் கமிட்டி அடிப்படையில், கூட்டுறவுச் சட்டத்தை மாற்றித் திருத்திக் கொண்டு வராததால் ஊழல் வளர்ந்து போவதைப் பற்றி விவாதிக்க—